ஈஸால்ஸவாப்

(இறந்தோர்க்கு நன்மை சேர்ப்பித்தல்)



தொகுத்தோன்
பாண்டிச்சேரி வா. கமாலுத்தின் ஆலிம்

“ஈஸால் ஸவாப் ”

(இறந்தோர்க்கு நன்மை சேர்ப்பித்தல்)

தொகுத்தோன்

பாண்டிச்சேரி, வா. கமாலுத்தீன் ஆலிம்

No. 13, அரஃபாத் வீதி,

கோட்டக்குப்பம்

பாண்டிச்சேரி-3

பொருளடக்கம்

TOUCH **என்னுரை**

நஹ்மதுஹூ வநுஸல்லி அலா ரசூலிஹில் கரீம்

"ஈஸாலெ ஸவாப்"

"இறந்தோர்க்கு நன்மை சேர்ப்பித்தல்" என்னும் இத்தொகுப்பு, சுன்னத் வல்ஜமாஅத்தினரின் கொள்கை வழி தொகுக்கப்பட்டதாகும். குர்ஆனிலும், அஹாதீஸ்களிலும் மற்றுமுள்ள கலைகள் அனைத்திலும் நம்முடைய நாற்பெரும் இமாம்களும், அவர்கள் வழிவந்த மேதைகள் அனைவருமே நுண்ணறிவு பெற்று விளங்கி வந்தனர். அவர்களது ஆராய்ச்சிகள் யாவும் இறையச்சம், பேணுதல், மறுமையின் சிந்தனை, நல்லொழுக்கப் பண்பாடுகள் முதலியவற்றின் மீது அமைந்தனவாகும். அவர்கள் நுனிப்புல் மேய்ந்தவர்களல்லர். ஒவ்வொரு சொல்லின் புறக்கருத்தையும், அகக் கருத்தையும் நன்கு உணர்ந்திருந்தனர். அல்லாஹ் அவர்களுக்குத் தன் புறத்திலிருந்து விளக்கங்களைத் தந்துதவினான்.

முஸ்லிம்கள் அனைவரும் அவர்களுக்கு நன்றி பாராட்டிட கடமைப்பட்டோர் ஆவோம். இத்தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஆதாரங்களை மறுப்போர் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை. எது உண்மை? எது பொய் என்பனவற்றை அல்லாஹ்வே மிக அறிந்தவன். நாமெல்லாம் மறுமையில் அ:வன் முன் நிறுத்தப்படுவோம். அல்லாஹ் தீர்ப்பு வழங்குவான். சுன்னத் வல்ஜமாஅத்தின் வழி நின்று இமாம்கள், மார்க்க மேதைகள் ஆகியோரின் குர்ஆன், ஹதீஸ்களின் விளக்கங் களை அவர்கள் மூலம் பெற்று, நாம் செயல்பட்டு நடந்திட அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்லருள்பாலிப்பானாக! ஆமீன்!

எளிய ஊழியன்

ஹிஜ்ரீ 1422

வா. கமாலுத்தீன் ஆலிம்

31-07-2000

பாண்டிச்சேரி

1. பெற்றோர்க்குப் பிள்ளைகள் கேட்கும் துஆ

وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ وَقُلْ رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيٰنِي صَغِيرًا

இன்னும் அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடப்பீராக! அன்றி, "என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் (பரிவுடன்) வளர்த்தது போன்று, நீயும் அவ்விருவர் மீதும் அன்பும், அருளும் புரிவாயாக!" என்றும் நீர் துஆ இறைஞ்சுவீராக! அத் : 17, வசனம் 24

நன்றியுள்ள பிள்ளைகள் தம்முடைய பெற்றோர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றை அல்லாஹுத் தஆலா இவ்வசனத்தில் எடுத்துரைத்துள்ளான்.

பெற்றோர்கள் உயிர் வாழும் காலத்தில் அவர்களிடம் பணிவாகவும், கண்ணியத்துடனும் நடந்து வரவேண்டும். மேலும், அவர்களுக்காக துஆவும் செய்து வரவேண்டும். அவர்கள் இறந்து விட்ட பிறகும் அவர்களுடைய பாவமன்னிப்பிற்காகவும், சுவர்க்க வாழ்விற்காகவும் துஆச் செய்து கொண்டேயிருக்கவேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "நான் சுவர்க்கத்தில் நுழைந்த பொழுது அங்குக் குர்ஆன் ஓதும் ஒலி கேட்டது. யார் குர்ஆன் ஓதுகிறார்? என்று நான் கேட்டேன். "ஹாரிது பின் நுஃமான் (ரலி)" என்று வானவர்கள் (மலக்குகள்) பதில்

அளித்தார்கள். இதனைக் கேட்ட சஹாபாக்களுக்கு, ஹாரிது பின் நுஃமான் (ரலி) அவர்களுக்கு இந்த "தரஜா" உயர்நிலை எப்படி வந்தது? என்றெண்ணம் ஏற்பட்டது. அதற்குரிய காரணத்தை நபி (ஸல்) அவர்கள், "பெற்றோர் களுக்கு நலவு செய்வதன் நன்மை இதுவே! பெற்றோர் களுக்கு நலவு செய்வதன் நன்மை இதுவே! ஹாரித் பின் நுஃமான் (ரலி) அவர்கள் பெற்றோர்களிடம் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டார்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹழரத் ஆயிஷா (ரலி),
நூல் : மிஷ்காத் பாகம் 2, பக்கம் 711,
மளாஹிருல் ஹக் பாகம் 4, பக்கம் 4

மனிதன் தன் பெற்றோருக்கு நன்றி செய்யும்படி நாம் அவனுக்கு நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய், துன்பத்துடனேயே (கருவில்) அவனைச் சுமந்திருந்து, துன்பத்துடனேயே அவனைப் பெற்றெடுத்தாள். அவள் கருவுற்றதிலிருந்து, இவன் பால்குடி மறக்கும் வரையில் (முப்பது மாதங்கள் (மிக்க வேதனையுடன் செல்லு கின்றன.) இவன் வாலிபமாகி நாற்பது வயதடைந்தால்,

"என் இறைவனே! நீ என் மீதும், என் தாய் தந்தையர் மீதும் புரிந்த அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்தி, உன்னுடைய திருப்தியை அடையக்கூடிய நற்செயல் களைச் செய்யும்படி(யான நல்லறிவை) நீ எனக்குத் தந்தருள்வாயாக! (எனக்கு உதவியாக இருக்கும்படி) எனக்காக என்னுடைய சந்ததியை நீ சீர்திருத்தி வை. நிச்சயமாக நான் உன்னையே நோக்கினேன். அன்றி நிச்சயமாக நான் (உனக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களில் உள்ளேன்" என்று கூறுவான்.

இத்தகையோர் செய்த நன்மைகளை நாம் ஏற்றுக் கொண்டு, சுவனவாசிகளான இவர்களின் பாவங்களையும் புறக்கணித்து விடுவோம். இவர்களுக்கு அளிக்கப்பட்ட இவ்வாக்கு உண்மையான வாக்குறுதியாகும்.

அத் : 46, வசனம் 15,16

''நல்லெண்ணத்துடன் இறைஞ்சுவோரின் துஆக் களையும், நற்செயல்களையும் நாம் ஏற்று, அவர்களுடைய தீய செயல்களை மன்னித்து, அவர்களை சுவனவாசிகளில் சேர்த்து விடுவோம். இது அவர்களுக்கு அளித்துள்ள உண்மையான வாக்குறுதியாகும்'' என அல்லாஹ் கூறியுள்ளபடி, பிள்ளைகள் பெற்றோர்கள் உயிர் வாழும் பொழுதும், இறந்த பின்னரும் அவர்களுக்காக துஆக் கேட்டு வந்தாலோ, அவர்கள் நற்செயல்கள் செய்து வந்தாலோ அவற்றை ஏற்பதுடன், பிள்ளைகளின் பாவங்களையும் மன்னித்து சுவர்க்கத்தை அளிப்போம் என்பதாக அல்லாஹ் வாக்குறுதி தந்துள்ளான். இதன் அடிப்படையில் இறந்த பெற்றோர்களுக்காக பிள்ளைகள் அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டி துஆ இறைஞ்சுவதுடன் அப்பெற்றோர்களுக்காக சதகா, குர்பானி போன்ற நற்செயல்களையும் செய்து வர வேண்டும்.

அல்லாஹ் மேலும் கூறுகிறான் : ''இறைவா! எனக்கும் என் பெற்றோர்களுக்கும் இன்னும் முஃமினான ஆண் பெண்களின் பாவங்களையும் மன்னித்தருள்வாயாக!''

அத் : 17, வசனம் 28

எவர்கள் (முஹாஜிர்களாகிய) இவர்களுக்குப் பின் (மதீனாவுக்கு) வந்தார்களோ, அவர்களுக்கும் (அதில் பங்குண்டு). இவர்கள்,

''எங்கள் இறைவனே! எங்களையும், எங்களுக்கு முன் ஈமான் கொண்ட எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள். ஈமான் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் குரோதங்களை உண்டு பண்ணாதே! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிக்க கிருபையுடையோனும், இரக்கமுடையோனுமாக இருக்கின்றாய்'' என துஆ இறைஞ்சிக் கொண்டே இருக்கின்றனர். அத் : 59, வசனம் 10

இவ்வசனங்களின் மூலம் அறியவருவது என்ன? உயிர் வாழ்ந்து கொண்டிருப்போர் இறந்தவர்களுக்காக துஆ இறைஞ்சினாலோ, சதகா, குர்ஆன் ஓதுதல் போன்ற நற்செயல்களைச் செய்தாலோ அவை யாவும் நிச்சயமாக இறந்தவர்களுக்குப் போய்ச் சேருகின்றன என்பதாகும்.

''இறந்தவர்களுக்காகச் செய்யப்படும் சதக்கா, பதலெ ஹஜ்ஜு, துஆ, ஓதுதல் போன்றவை அவர்களை அடைகின்றனவா?'' என்று செய்யிதுனா அனஸ் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள்,

''அவை நிச்சயமாகச் சேருகின்றன. அவற்றைப் பெறுபவர் அன்பளிப்பு பெற்றவர்களைப் போன்று மகிழ்ச்சியடை கிறார்கள்'' என விடையளித்தார்கள்.

மஜ்மஅல் கபீர். அறிவிப்பவர் : அபூ ஹஃப்ஸ் (ரலி)

ஹலரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வருகை தந்து, ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாயார் இறந்து விட்டார்; எந்த வஸிய்யத்தும் அவரால் செய்ய

இயலவில்லை. ஒருவேளை அவரால் பேச முடிந்திருப்பின் கட்டாயம் சதகா மற்றும் தானதருமங்கள் செய்திருப்பார்'' என்று எண்ணுகிறேன்.

எனவே, நான் அவர்களின் சார்பாக அறங்கள் (சதகாக்கள்) செய்தால் அதன் நற்கூலிகள் அவர்களைச் சேருமா?'' என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஆம்' (சேரும்) என்று கூறினார்கள்.

சஹீஹ் முஸ்லிம் பாகம் 1. பக்கம் 163

ஹலரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார் கள் : நபி (ஸல்) அவர்கள் கப்ரில் இறந்தவர்களின் நிலை, மூழ்கக்கூடியவர்களின் நிலையைப் போன்றிருக்கும். அவர்கள் ஒவ்வொரு நேரமும் தங்களது (உறவினர்) தொடர்பான அதாவது தாய், தந்தை, சகோதரன், நண்பன் இவர்களின் புறத்திலிருந்து இறைஞ்சுதலின் (துஆவின்) எதிர்ப்பார்ப்பில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

எந்நேரம் அவர்களுக்கு துஆ போய்ச் சேருமோ அது அவர்களிடம் உலகம், உலகிலுள்ள பொருள்களை விடவும் மேன்மைக்குரியதாக இருக்கிறது. அல்லாஹுத் தஆலா கப்ராளிகளுக்கு மலை போன்ற நன்மைகளை உலகத்தாரின் துஆவினால் சேர்ப்பித்து வைக்கிறான். உயிருடனிருப்பவர்கள் சார்பாக இறந்தோர்களுக்கு வழங்கப்படும் சிறந்த அன்பளிப்பு பாவமன்னிபுத் தேடுவதேயாகும்.

மிஷ்காத் ஷரீப் பாகம் 1. பக்கம் 387

மளாஹிர் ஹக் பாகம் 2. பக்கம் 292

عَنْ اَبِيْ اُسَيْدٍ قَالَ : كُنَّا عِنْدَ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ رَجُلٌ يَا رَسُوْلَ اللّٰهِ هَلْ بَقِيَ مِنْ بِرِّ اَبَوَيَّ شَيْءٌ بَعْدَ مَوْتِهِمَا اَبَرُّهُمَا : فَقَالَ نَعَمْ خِصَالٌ اَرْبَعٌ : اَلدُّعَاءُ لَهُمَا وَالْاِسْتِغْفَارُ لَهُمَا وَاِنْفَاذُ عَهْدِهِمَا وَاِكْرَامُ صَدِيْقِهِمَا وَصِلَةُ الرَّحِمِ الَّتِيْ رَحِمَ لَكَ مِنْ قِبَلِهِمَا

நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருந்தோம். அப்பொழுது ஒரு மனிதர் கேட்டார் : அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ''எனது பெற்றோர் இறந்து விட்ட பின்னர், அவர்களுக்கு நன்மையளிக்கத்தக்க செயல் ஏதும் உள்ளதா? நான் அதனை நிறைவேற்றிட முடியுமா?''

அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''ஆம்; நான்கு செயல்கள் உள்ளன என்று விடை பகர்ந்தார்கள். அவை :

1. அவ்விருவருக்காகவும் துஆச் செய்வது; மேலும் அவர்களை இறைவன் மன்னித்தருளுமாறு வேண்டுவது.

2. அவர்கள் செய்திருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது.

3. அவர்களுடைய நண்பர்கள் நெருங்கிப் பழகியவர்கள் ஆகியோருடன் கண்ணியத்துடன் நடந்து வருவது.

4. அவ்விருவரின் மூலம் உமக்குக் கிடைக்கப் பெற்ற நெருங்கிய உறவினர்களுடன் இணைந்து வாழ்வது'' (என்று கூறினார்கள்.)

அறிவிப்பவர் : அபூ உஸைத் (ரலி), அல்அதபுல் முஃப்ரத்

சஃது இப்னு உப்பாதா (ரலி) தம்முடைய தாயார் நேர்ந்திருந்த நேர்ச்சையைப் பற்றியும் அவர்கள் தமது நேர்ச்சையை நிறைவேற்றாமல் இறந்து விட்டார்கள் என்பது குறித்தும் நபி (ஸல்) அவர்களிடம் கூறி விளக்கம் கேட்டார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''அந்த நேர்ச்சையை அவரின் சார்பாக (நீர்) நிறைவேற்றுவீராக!'' என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), புகாரீ, முஸ்லிம்

''குர்ஆனை ஓதி அதற்காக எந்தக் கூலியையும் பெறாமல் அதை ஹத்யா செய்வது, நோன்பு, ஹஜ்ஜு ஆகிய அமல்களை ஹத்யா செய்வதைப் போன்றதேயாகும். நோன்பு, ஹஜ்ஜின் நன்மைகள் 'ஹத்யா' செய்யப்படுவோருக்குப் போய்ச் சேருவது போல குர்ஆன் ஓதி சேர்ப்பிக்கப்படும் நன்மையும் போய்ச் சேரும்''.

அர்ரூஹ் பக்கம் 226

''தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜகாத் போன்ற இவற்றின் நன்மைகள் (மற்றவர்களுக்குச்) சென்றடைகின்றன'' என்பதாக இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

ஐனுல் ஹிதாயா பாகம் 1, பக்கம் 39

2. ஒரு ஹதீஸ் பற்றிய விளக்கம்

ஹலரத் அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள் : ''எப்பொழுது மனிதன் இறந்துவிடுவானோ அவனின் செயல்கள் (பற்றிய பதிவேடும்) மூடப்பட்டு விடுகின்றது. ஆனால், மூன்று செயல்கள் (அவற்றின் நன்மைகள் இறந்த பின்னரும்) கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன.''

1. தொடர்ந்து நடக்கும் அறம் (சதகா)

2. மக்களுக்குப் பயனளிக்கும் கல்வி

3. (தம் பெற்றோருக்காக) துஆ இறைஞ்சிடும் நல்ல பிள்ளைகள்.

திர்மிதீ ஷரீஃப் பாகம் 1, பக்கம் 277

மேற்கண்ட ஹதீஸில், **''இன்கதஅ அன்ஹு அமலுஹு'' 'அவனுடைய அமல் (செயல்)கள் துண்டிக்கப்பட்டு விடுகின்றன'** என்பதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, அம்மனிதன் இறப்பதற்கு முன்னர் செய்து வந்த நற்செயல்கள் மட்டுமேதான் இறந்தவருக்குப் பயன் தந்து கொண்டிருக்கும். அவையன்றி, ''இறந்த மனிதருக்காக மற்றவர்கள் சேர்த்து வைத்திடும் நன்மைகளை இறந்தவர்கள் அடையப் பெறமாட்டார்கள்'' என்பதாக இன்றைக்குச் சிலர் கூறி வருகின்றனர். அதாவது, இறந்தவர்களுக்காக ஓதப்படும் யாசீன், குர்ஆன் போன்றவற்றின் நன்மைகள் ஓதியவர்களுக்குத்தான் கிடைக்கும்; இறந்தவர்களுக்குக் கிடைக்காது எனக் கூறுகின்றனர்.

இவர்கள் கூறுவது சரிதானா? பொருத்தமாக இருக்கிறதா? குர்ஆன் ஓதி, அதன் நன்மைகளை இறந்

தோர்க்குச் சேர்ப்பித்திடும் வழக்கம் நபித் தோழர்களின் காலத்தில் இல்லையே எனக் கூறுகின்றனர். சரி; குர்ஆன் ஓதி அதன் நன்மைகளை இறந்தவர்களுக்குச் சேர்ப்பிக்கக் கூடாது என்று ஹதீஸ் உள்ளதா?

நபித்தோழர்கள் காலத்தில் அப்படியொரு வழக்கம் இருந்திடவில்லை என்று கூறுகின்ற இவர்கள், நபித் தோழர்களை முழுக்க முழுக்கப் பின்பற்றுகின்றார்களா? அவர்களது கூற்றுக்களையும், நடைமுறைகளையும் முற்றிலும் ஏற்றுச் செயல்படுகிறார்களா? தங்களுக்குச் சாதகமானவற்றை ஏற்பதும், பாதகமானவற்றைப் புறக்கணிப்பதும்தாமே இவர்களது வழக்கம்.

அன்றிலிருந்து இன்று வரை தராவீஹ் இருபது ரக்அத்கள் தொழப்பட்டு வருகின்றன. இவ்வழக்கம் சஹாபாக்கள், தாபிஈன்கள், தபஉத் தாபியீன்கள், இமாம்கள் மற்றுமுள்ள நல்லோர்கள் அனைவரின் வழக்கமாக இருந்து வருகின்றது. இவர்கள் நபித் தோழர்களின் நடைமுறையைப் பின்பற்றுவோராக இருந்திடின் இருபது ரக்அத்கள் அல்லவா தொழ வேண்டும்? சரி; மேற்காணும் ஹதீஸ் பற்றிய விளக்கம் காண்போம்.

கேள்வி : ஏப்ரல் 2003 மனாரில் மௌலானா பதில்கள் பகுதியில் ''ஈஸால் ஸவாப்'' கூடும் என்பது பற்றி மிகத் தெளிவாக இடம்பெற்றிருந்தது. சிலர், திருக்குர்ஆனில், 'மனிதனுக்கு தான் முயற்சி செய்ததைத் தவிர வேறு (பலன்) கிடைக்காது' (53 : 38,39) என்ற வசனத்தையும், முஸ்லிமில் இடம்பெற்றுள்ள 'ஒரு மனிதன் இறந்து விட்டால் அவனது செயல் அவனை விட்டும் நின்று

விடும்; மூன்று விசயங்களைத் தவிர. (1) நிரந்தரமாக செய்யும் தர்மம். (2) பயன் பெறத்தக்க கல்வி. (3) அவனுக்காகப் பிரார்த்தனை புரியும் நல்ல குழந்தை' என்ற நபிமொழியையும் எடுத்துக்கூறி, இந்த வசனத்தில் அவரவருக்கு அவரவரது நன்மை மட்டுமே உண்டு என்றும், இந்த நபிமொழியில் கூறப்பட்ட மூன்று விசயங்கள் மூலம் மட்டுமே நன்மை கிடைக்கும். எனவே 'ஈசால் ஸவாபே இல்லை' என்று கூறுகிறார்கள். நான் குழம்பிப் போயுள்ளேன். இது பற்றி சரியான விளக்கம் தரவும்.

பதில் : குழம்ப வேண்டிய அவசியமில்லை; மேற்கூறப்பட்ட நபிமொழியையும், இறை வசனத்தையும் ''ஈஸால் ஸவாப்'' இல்லை என்பதற்கு ஆதாரமாகக் காட்டுவது எவ்வளவு அபத்தமானது என்பதை விரிவாகப் பார்ப்போம்.

மேற்கூறப்பட்ட நபிமொழியில் ''இன்கதஅ அன்ஹு அமலுஹு'' என்ற வாசகத்திற்கு 'மனிதன் இறந்த பின் அவனது செயலும் நின்றுவிடும்' என்பதுதான் நேரடிப் பொருளே தவிர, இதில் மற்றவர்களின் நல்ல செயல்களின் மூலம் ஏற்படும் நன்மைகளும் அந்த இறந்துவிட்ட மனிதனுக்குச் சேராது என்று கூறும் எந்த வாசகமும் இல்லை.

அடுத்து, ''ஈஸால் ஸவாபை'' மறுப்பவர்கள் ஆதாரம் என்று எண்ணிக் கூறும் திருக்குர்ஆனின் (53 : 38, 39) என்ற வசனத்தின் பொருள், ''ஒருவரின் (பாவச்) சுமையை மற்றொருவர் சுமக்கமாட்டார்; மேலும், மனிதனுக்கு தான் முயற்சி செய்ததைத் தவிர வேறொன்றும் கிடைக்காது'' என்பதுதான்.

திருக்குர்ஆனின் ஓர் அடிப்படையை நன்கு விளங்கிய பின் இந்த வசனத்தின் உண்மைப் பொருளைக் காண்போம்.

அதாவது, ஏதேனுமொரு நிகழ்ச்சியை முன் வைத்து இறக்கப்பட்ட வசனங்கள் பல திருக்குர்ஆனில் உள்ளன. இந்த வசனங்களில் அல்லாஹுத் தஆலா எதைக் கூற நாடுகிறான் என்பது. எதற்காக இவ்வசனம் இறக்கப் பட்டதோ அந்நிகழ்ச்சியையும், பின்னணியையும் இணைத்துப் பார்க்கும்போதுதான் முழுமையாக விளங்கும். இப்படிப்பட்ட வசனங்களில் நேரடி மொழிபெயர்ப்பை மட்டும் நாம் பார்த்தால் சில நேரம் தவறான அர்த்தங்கள் கூட ஏற்பட்டுவிடும்.

உதாரணமாக, குர்ஆனில் இடம்பெற்றுள்ள **''லக்கும் தீனுக்கும் வலியதீன்''** என்ற வசனத்திற்கு நேரடிப் பொருள் **''உங்களது மார்க்கம் உங்களுக்கு; எங்களது மார்க்கம் எங்களுக்கு''** என்பதுதான். இதை மேலோட்டமாகப் பார்த்தால் **''எம்மதமும் சம்மதமே''** என்ற கொள்கைக்கு ஆதாரமாக இருப்பது போல் தெரிகிறது; ஆனால் உண்மைக் கருத்து அதுவல்ல.

நபி (ஸல்) அவர்கள் மக்காவில் ஏகத்துவப் பிரச்சாரம் செய்தபோது, சிலை வணக்கத்திலிருந்த சில பிரமுகர்கள், ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம், 'நீங்கள் சிலைகளைப் பற்றி விமர்ச்சிப்பதை விட்டு விடுங்கள். நீங்கள் நாடினால் உங்களைச் செல்வச் சீமானாக ஆக்கிவிடுகிறோம்; உயர்க்குலத்துப் பெண்ணை கூட மணம் முடிக்க ஏற்பாடு செய்கிறோம் என்று கொள்கை ஒப்பந்தம் செய்ய நிர்பந்தித்தபோது, ''உங்களது நல்ல, தீய செயல்கள்

உங்களைச் சாரும்; எனது நல்ல, தீய செயல்கள் என்னைச் சாரும்'' என்று விவேகமாக பதில் கூறும் நோக்கில் சொல்லப்பட்டதே தவிர, இஸ்லாமிய ஏகத்துவக் கொள்கையும் 'குஃப்ரி'ய இறை நிராகரிப்புக் கொள்கையும் ஒன்றுதான்; இரண்டிற்கும் ஒரே பலாபலன்தான் கிடைக்கும். மனம்போன போக்கில் யாரும் எக்கொள்கை யையும் சரி என்று ஏற்று நடக்கலாம் என்று இதற்கு அறவே அர்த்தமல்ல.

இதுபோன்று, ''எவர்கள் தங்கத்தையும், வெள்ளியை யும் அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாமல் இருக்கிறார்களோ அவர்களுக்குத் துன்புறுத்தும் தண்டனை இருக்கிறது என்னும் நற்செய்தியை (நபியே!) நீர் அறிவிப்பீராக! (9 : 34) என்ற வசனம் இறங்கியபோது சஹாபாக்கள் வெளிப்படையான பொருளை விளங்கிக் கொண்டு (தங்கம், வெள்ளியை சேகரிக்கக்கூடாதோ? சொத்து சேகரிக்கக் கூடாதோ என்று) மிகவும் கவலைக் குள்ளாகி விட்டார்கள். இதை உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் எடுத்துச் சொன்னபோது, 'இது ஜகாத்து கொடுக்காமல் சேகரித்தவர்கள் விசயமாக இறங்கியுள்ளது' என்று விவரித்தார்கள். (அபூதாவூதி லுள்ள ஹதீஸின் கருத்து).

குர்ஆனில் பல இடங்களில் ''**அஸ்ஹாபுன்னார்**'' என்பதை நரகவாசிகள் என்ற அர்த்தத்திலேயே புழங்கப் பட்டுள்ளது. இதை மனதில் வைத்துக் கொண்டு (74 : 34) என்ற வசனத்தின் ''**வமா ஜஅல்னா அஸ்ஹாபன்னாரி இல்லா மலாயிகத்தன்**'' என்ற சொற்றொடருக்கு பொருள் கொண்டால், ''நாம் நரகவாசிகளாக வானவர் களையே ஆக்கியுள்ளோம்'' என்று விளங்கவேண்டும்

ஆனால், எந்த அர்த்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று இதன் பின்னணியை வைத்து பார்க்கும் போதுதான் இந்த இடத்தில், ''**அஸ்ஹாபுன்னார்**'' என்பது நரகத்தின் காவலாளிகள் என்ற அர்த்தத்தில் புழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவரும்.

ஆக, எப்போது எதற்காக எந்த சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டுள்ளது என்பன போன்ற பின்னணிகளைப் பார்க்காமல் குர்ஆனின் வசனங்களுக்கு அர்த்தம் வைத்தால் சில நேரம் இதுபோல் தவறான அர்த்தத்தைத் தந்துவிடும்.

இதுபோன்றுதான் ''ஈசால் ஸவாப்'' இல்லை என்பதற்கு ஆதாரமாக யூகித்துக் கொண்டு சொல்லப் படும் (53 : 39) என்ற வசனத்தையும் நாம் அணுக வேண்டும்.

வலீத் இப்னு முகீரா என்பவர், ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் உபதேசத்தைக் கேட்டு ஈமான் கொள்ள உறுதி எடுத்து விட்டார்கள். அந்நேரத்தில் அவர்களது நண்பர் ஒருவர் அவர்களிடம், ''என்ன நீ உனது மூதாதையர்களின் மதத்தை விடப்போகிறாயே? உனது பழைய கொள்கை யிலேயே உறுதியாக இரு'' என்று சொல்லவே, பதிலுக்கு வலீத், ''நான் மறுமை வேதனையைப் பயப்படுகிறேன்'' என்று சொன்னார்கள். உடனே அந்த நண்பர் ''இதுதானா? ஂஹூ... நீ எனக்கு இவ்வளவு பணம் தந்தால் மறுமையில் உனக்கு வேதனை வராமல் நான் தடுத்துவிடுவேன்'' என்று கூறினார். உடனே குறிப்பிட்ட தொகையை கொடுப்பதற்கு வலீத் ஒப்புக் கொண்டு, அதை நம்பி ஈமான் கொள்ளும் திட்டத்தை கைவிட்டு விட்டார்.

இப்போதுதான், "**அFபரஅய்த்தல்லதீ தவல்லா**" (53 : 33) என்ற வசனமும், அதை தொடர்ந்து (53 : 38, 39) வசனங்களும் இறங்கின.

ஆக, இந்த வசனம் இறங்கக் காரணமான இந்த சம்பவப் பின்னணியை வைத்துப் பார்க்கும்போது, இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள "**இல்லா மா ஸஆ**" என்ற வாசகத்திற்கு "ஈமானிய முயற்சி" அதாவது, அவரவரது ஈமான் (நம்பிக்கை) அவரவர்களுக்குத்தான் பலனளிக்கும். ஈமான் (நம்பிக்கை) கொள்ளாமல் மற்றவரின் முயற்சியினால் வேதனையிலிருந்து தப்பிவிட முடியாது. காரணம், "ஒருவர் மற்றவரின் பாவச்சுமையை சுமக்கமாட்டார்" என்பதுதான் இதன் பொருள். இதே கருத்து, "**குர்துபீ, ரூஹுல் மஆனி, தFப்ஸீருத்தபரீ, அத்துருல் மன்ஸூர், ஜலாலைன்**" போன்ற பிரசித்தி பெற்ற தப்ஸீர்களிலும் இடம்பெற்றுள்ளது.

குர்ஆன் விரிவுரையாளர்களின் தலைவரான இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஜாஹித் (ரஹ்), இப்னு ஜைது (ரஹ்) அவர்களும் இன்னும் பல குர்ஆன் விரிவுரையாளர் களும் இக்கருத்தையே தேர்ந்தெடுக்கிறார்கள்.

இப்படிப் பொருள் கொள்ளும் போதுதான் (53 : 38, 39) என்ற வசனத்தின் பொருள் சரியாக அமையும். மேலும், ஒருவர் தனது நன்மையான காரியங்களின் நன்மைகளை மரித்தவர்களுக்கு எத்தி வைப்பது கூடும் என்று வந்துள்ள எண்ணற்ற நபிமொழிகளையும் மறுக்கும் நிலை ஏற்படாது.

- நன்றி : மனாருல் ஹுதா

3. இறந்தோர்க்குச் செய்யவேண்டியவை

بَابُ الدُّعَاءِ لِلْمَيِّتِ بَعْدَ دَفْنِهِ وَالْقُعُوْدِ عِنْدَ قَبْرِهِ سَاعَةً لِلدُّعَاءِ لَهُ وَالْاِسْتِغْفَارِ وَالْقِرَاءَةِ

وَعَنْ أبى عمرو وقيل أبو عَبْدِ اللّٰه وقيل أبو ليلى عُثْمَانَ بْنِ عَفَّانَ رضى الله عنه قَالَ كَانَ النَّبِيُّ صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ إِذَا فَرِغَ مِنْ دَفْنِ الْمَيِّتِ وَقَفَ عَلَيْهِ فَقَالَ اِسْتَغْفِرُوا لِأَخِيْكُمْ وَسَلُوا لَهُ بِالتَّثْبِيتِ فَإِنَّهُ الْآنَ يُسْأَلُ – رواه ابو داؤد

ஹலரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அறிவிக்கிறார்கள் : மய்யித்தை நல்லடக்கம் செய்தபின் நபி (ஸல்) அவர்கள் அம்மண்ணறையின் அருகில் நிற்பார்கள். மேலும், கூறுவார்கள் : உங்கள் சகோதரருக்காக பிழை பொறுப்பு இறைஞ்சுங்கள். அவருக்கு (முன்கர் நகீர்) வானவர்களின் விசாரணையின்போது உறுதிப்பாட்டைக் கேளுங்கள். நிச்சயமாக அவர் இப்பொழுது விசாரிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார்.

அபூதாவூத்

நல்லடக்கம் செய்த பின் மய்யித்திற்காக துஆச் செய்தல், மய்யித்திற்கு துஆச் செய்யவும், பாவ மன்னிப்பிற்காக இறைஞ்சவும், குர்ஆனை ஓதுவதற் காகவும் கப்ரின் அருகே சிறிது நேரம் அமரவும்.

இமாம் நவவீ (ரஹ்). ரியாளுஸ் ஸாலிஹீன்

இமாம் ஷாஃபிஈ (ரஹ்) கூறுகிறார்கள் : மய்யித்தை நல்லடக்கம் செய்த பின் மண்ணறையின் அருகே இருந்து திருக்குர்ஆனிலிருந்து சில வசனங்களை ஓதுவது முஸ்தஹப்பு ஆகும். மேலும், அங்கு முழுக் குர்ஆனையும் நிறைவு (கத்தம்) செய்தால் அதுவும் மிக்க அழகாகும்.

ரியாளுஸ் ஸாலிஹீன்

அடக்கம் செய்யும் பொழுதும், அடக்கம் செய்த பின்னரும் சில துஆக்கள் ஓதுவதற்கு ஹதீஸ்களில் ஆதாரம் உள்ளது. "ஷரஹுஸ் ஸுதூர்" என்னும் நூலில் பின்வரும் செய்தி காணப்படுகிறது.

அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறினார்கள் : "ஜனாஸா கப்ருக்கு அருகில் கொண்டு வரப்பட்டு மக்களும் அமர்ந்து விட்டால் நீ அவ்விடத்தில் அமராமல் கப்ரின் ஓரத்தில் நின்று கொள். ஜனாஸா கப்ருக்குள் வைக்கப்படும் போது இந்த துஆவை ஓது.

"அல்லாஹ்வின் திருப்பெயரைக் கொண்டும், அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களின் மார்க்கத்தின் பேரிலும் வைக்கிறேன்.

இறைவா! உன்னுடைய அடியார் உன்னைக் கொண்டு இறக்கி வைக்கப்பட்டுள்ளார்; அவரை இறக்கி

வைப்போரில் நீயே மேலானவன். உலக வாழ்க்கையை அவரது முதுகிற்குப் பின்னால் நீ ஆக்கு! அவர் விட்டு வந்த உலகத்தை விடவும் அவர் புகுந்துள்ள உலகை சிறந்ததாக ஆக்கிவை! அல்லாஹ்விடம் உள்ள வாழ்க்கை நன்மக்களுக்கு சிறந்ததாக இருக்கும் என்று நீதான் அருளியுள்ளாய்''.

- பஸார்

அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ''நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். உங்களில் ஒருவர் இறந்து விட்டால் தாமதமின்றி அவரை அவரது மண்ணறைக்குக் கொண்டு செல்லுங்கள். அவரது தலைமாட்டில் ஃபாத்திஹா சூராவை (பைஹகீ அறிவிப் பில் பகரா சூராவின் ஆரம்ப ஆயத்தை)யும், அவரது கால்மாட்டில் பகரா சூராவின் கடைசி ஆயத்துகளையும் அவரின் கப்ரில் ஓதவும்.

- தப்ரானீ, பைஹகீ

அப்துர் ரஹ்மான் பின் அல்லாம் பின் ஹல்லாஜ் அறிவிக்கிறார்கள் : என்னுடைய தந்தை என்னிடம் பின்வருமாறு கூறியிருந்தார்கள் : ''என்னை கப்ரில் வைக்கும் பொழுது அல்லாஹ்வின் திருப்பெயரைக் கொண்டும் அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களின் மார்க்கத்தின் பேரிலும் வைக்கிறேன்'' என்று நீ கூற வேண்டும். பிறகு மண்ணைத் தள்ளி மூடிவிட்டு என் னுடைய தலைமாட்டில் பகரா சூராவின் ஆரம்பத்தையும், முடிவையும் ஓதவேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர் கள் இதைப் பற்றிச் சொன்னதாக நான் கேட்டுள்ளேன்.

-தப்ரானீ

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ உமாமா (ரலி) அறிவிக்கிறார்கள் : ''உங்கள் சகோதரர்களில் ஒருவர் இறந்து, அவரை நல்லடக்கம் செய்தபின், கப்ரின் தலைமாட்டில் உங்களில் ஒருவர் நின்று கொண்டு இப்படிச் சொல்லவும்.

இன்னவரின் மகன் இன்னவரே! இவ்வாறு கூறும் பொழுது அவர் செவியேற்பார். ஆனால் பதிலளிக்க மாட்டார். மீண்டும், ''இன்னவரின் மகன் இன்னவரே!'' என்று கூறவும். இப்பொழுது அவர் எழுந்து அமர்ந்து கொள்கிறார். மீண்டும், ''இன்னவரின் மகன் இன்னவரே!'' என்று கூறவும். இப்பொழுது அவர், ''எங்களுக்கு வழிகாட்டுங்கள். அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவான்'' என்று கூறுவார். ஆனால், அதை நீங்கள் உணரமாட்டீர் கள். அடுத்து, உலகில் நீ கொண்டிருந்த கலிமாவை நினைத்துப்பார்; அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மது (ஸல்) அவர்களை நபியாகவும், குர்ஆனை வழிகாட்டியாகவும் நீ விரும்பி ஏற்றிருந்தாய்'' என்று கூறவும். இது முன்கர்-நகீர் ஆகிய மலக்குகளுக்கு ஆதாரமாக அமையும்.

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கூறி முடித்தபின், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ''இறந்தவரின் தாயார் பெயர் தெரியாவிட்டால் என்ன செய்வது? என்று ஒருவர் கேட்டார். அதற்கு ''ஹவ்வாவின் பக்கம் இணைத்துக் கொள்ளவும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

-தப்ரானீ, இப்னு முன்த்தா

நபி (ஸல்) அவர்களே சஹாபாக்களுக்கு முன்னிலையில் கப்ரின் அருகே நின்று துஆச் செய்துள்ளார்கள் என்றும், கலிமா மற்றும் முன்கர்-நகீரின் கேள்வி பதில்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்றும் ''ஷரஹு ஸ்ஃபருஸ் ஸஆதா'' என்னும் நூலில் எழுதப் பட்டுள்ளது. கப்ரில் ஜனாஸாவை வைப்பவர்,

''பிஸ்மில்லாஹி வபில்லாஹி வஅலா மில்லத்தி ரசூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்'' என்று ஓதுவது 'முஸ்தஹப்பு' என்று துர்ருல் முக்தாரில் காணப்படுகிறது.

''எவர் தன்னைத் தானே கேள்வி கேட்டு (விசாரணை செய்து) கொண்டு மரணத்திற்குப் பின்னுள்ள தனது வாழ்வுக்காக இவ்வுலக வாழ்வை அமைத்துக் கொள் கிறாரோ, அவரே அறிவாளியாவார்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஷத்தாத் இப்னு அவ்ஸ் (ரலி)
அஹ்மத், திர்மிதீ, இப்னு மாஜா

''எவரேனும் மண்ணறைக்குச் சென்று அங்கு அடக்கம் பெற்றவர்களுக்கு பதினொரு தடவை 'குல்ஹுவல்லாஹு' ஓதி அதன் நன்மையை அவர்களுக்குக் கொடுப்பார்களாயின் இறந்து போனவர்களின் எண்ணிக் கையளவு கூலி கொடுக்கப்படும்''.

அபூ முஹம்மத் ஸமர்கந்தீ
அறிவிப்பவர் : அலீ (ரலி), ஷரஹுஸ் ஸுதூர் பக்கம் 130

''சஹாபாக்களில், அன்சார்களில் எவரேனும் இறந்து விட்டால் ஒருவர் பின் ஒருவராக அவரது கப்ரில் குர்ஆன் ஓதுவார்கள்.

அறிவிப்பவர் : ஷஅபீ (ரலி), திலால்

எவர் ஒருவர் தாய் தந்தையரை அல்லது அவர்களில் ஒருவரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ஜியாரத்

செய்து அவர்களுக்காக ''சூரத்து யாஸீன் ஓதுவாராயின் அந்த சூராவின் எழுத்துக்களின் எண்ணிக்கை அளவு அவரின் பாவங்கள் மன்னிக்கப்படும்''.

அறிவிப்பவர் : அபூபக்கர் சித்தீக் (ரலி).
தைலமீ, இப்னு நஜ்ஜார், ராபிஈ
இத்திஹாப் பக்கம் 363, பாகம் 10
ரத்துல் முக்தார் பாகம் 2, பக்கம் 257
தஹ்தாவீ அலத்துர் பாகம் 1, பக்கம் 542
ஃபத்ஹுல் கதீர் பாகம் 2, பக்கம் 308, 309
ஃபத்ஹுல் முல்ஹிம் பாகம் 3, பக்கம் 369, 370

ஹலரத் ஜைனுல் ஆபிதீனின், இர்ஷாதுல் இபாதா பக்கம் 70
திருக்குர்ஆன் சூராக்களின் சிறப்புகள் பற்றிய பாடம்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒருவர் கப்றுஸ்தானுக்குச் சென்று, ''சூரத்துல் ஃபாத்திஹா, குல்ஹுவ வல்லாஹுவ அஹத், அல்ஹாக்குமுத்தகாஸுரு'' போன்ற சூராக்களை ஓதி அதன் நன்மைகளை அவர்களுக்குச் சேர்த்து வைப்பாராயின் மறுமையில் அவர்கள் இவனுக்காக இறைவனிடம் மன்றாடுவார்கள்.

-ஹிக்காயத் இஸ்ஸுத்தீன்

ஹன்பலீ மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களுள் ஒருவரான இப்னு குதாமா (ரஹ்) அவர்கள் ''முக்னீ مغني'' என்னும் நூலில் எழுதுகிறார்கள் : ''இறந்து விட்டவர்கள் எல்லா அமல்களைக் கொண்டும் பயனடைகிறார்கள். குர்ஆன் ஓதுவதும் அவற்றைச் சார்ந்ததே. ஒரு மனிதன் செய்யும் எந்த நற்செயலும், வணக்க மூலமும் அவற்றின் கூலியை இறந்து விட்டவருக்கு அவன் சேர்த்து வைப்பானாயின் அல்லாஹ்வின் நாட்டப்படி (இறந்தவர்) அதன் மூலம் பயனடைகிறார்.

மேலும், இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் ''இறந்தவர் உடலால் செய்யப்படுகின்ற அனைத்து வணக்கங்கள் மூலமும் பயனடைகிறார். குர்ஆன் ஓதுவதாகட்டும், பொருள் மூலம் வழங்கப்படும் சதகா, துஆ, இஸ்திஃபார் மூலம் நன்மை அடைகிறார்'' என்று கூறுகிறார்கள்.

ஹனஃபிய்யாக்களின் பிந்தைய இமாம்களின் முடிவை அல்லாமா ஷாமீ (ரஹ்) துர்ருல் முக்தாரில், ''மய்யித்திற்கு முன் அமர்ந்தோ அல்லது மய்யித்து இல்லாவிட்டாலோ அவர்களுக்குக் குர்ஆன் (அவர்களின் பாவமன்னிப்புக்கு) துஆக் கேட்கலாம். ஏனெனில், குர்ஆன் ஓதுமிடத்தில் ரஹ்மத்தும், பரக்கத்தும் இறங்குகின்றன. எனவே, கிராஅத்திற்குப்பின் துஆக் கேட்டால், அல்லாஹுத் தஆலா விரைவாக ஒப்புக் கொள்வான் என்பதே மிகவும் ஆதாரமான முடிவாகும்'' என்று கூறுகிறார்கள். தஸ்ஹீஹுல் அகாயித் பக்கம் 125

அல்லாமா பத்ருத்தீன் அய்னீ (ரஹ்) அவர்களது ஹிதாயாவின் விரிவுரையில் ஹஜ்ஜுடைய பாடத்தில் கூறுகிறார்கள் : ''தொன்றுதொட்டு காலாகாலமாக முஸ்லிம் கள் அனைவரும் குர்ஆனை ஓதி அதன் நன்மையை இறந்தவர்களுக்கு அளிப்பதில் ஏகமனதாக ஏற்று செயல்படுகிறார்கள்.

இதன்படியே ஷாஃபிஈ, மாலிகீ போன்ற எல்லா மத்ஹபுகளின் நல்லோர்களும், மார்க்கப் பேணுதல் உடையவர்களும் அமல் செய்கின்றனர். இதனை ஏற்காதவன் கூட மறுத்துக் கூறமாட்டான். எனவே, இச்செயல் (ஈஸால் சவாப்) 'இஜ்மாஉ' (அறிஞர்களின் ஒன்றுபட்ட கருத்தாக) ஆகிவிட்டது.

தஸ்ஹீஹுல் அகாயித் பக்கம் 126

மேலும், அனைத்து நாட்டு முஸ்லிம்களும் காலங்காலமாக அவர்களின் இறந்தவர்களுக்காக குர்ஆன் ஓதி முடிப்பதை, யாசீன், சூரா முல்க் மற்றும் திக்ருகள் ஆகியவற்றை ஓதுவதை நீங்கா வழக்கமாக கொண்டுள்ளனர். ஆக இதுவே '(இஜ்மாஉ) ஆகிவிட்டது' என்று இமாம் குர்துபி, மாலிக்கீ (ரஹ்) அவர்கள்,

''உங்களின் மவ்த்தாக்களுக்கு யாசீன் ஓதுங்கள்'' என்றும் ஹதீஸின் விரிவுரையிலும் இதே போன்று இமாம் சுயூத்தி, ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் தங்களின் ''ஷரஹுஸ் ஸுதூர்'' என்னும் நூலிலும் கூறுவதாக இமாம் முல்லா அலீ காரீ, ஹனஃபீ (ரஹ்) அவர்கள் தங்களது மிஷ்காத்தின் விரிவுரையான மிர்காத் பக்கம் 332, பாகம் இரண்டிலும் கூறுகிறார்கள்.

இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களின் மத்ஹபின் படி ஒவ்வொரு நஃபிலான வணக்கங்களின் நன்மையைச் சாட்டுவதால், பிறருக்கு அது சேரும். நபி (ஸல்) அவர்களின் தூய ஆன்மாவுக்கு நன்மையை எத்தி வைப்பதும் கூடும். அது மட்டுமென்ன? அது பரக்கத்திற்கும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் கூட காரணமாக இருக்கிறது.

- ஷாமீ

ஷாஃபியீ மத்ஹபின் நூற்களில் (கிதாபுகளில்) இருந்து குர்ஆன் ஓதுவது மிக்க சிறப்பானது என்று எழுதப்பட்டுள்ளது. இதன்படி கப்ரின் அருகில் குர்ஆன் ஓத நாடினால், மய்யித்தின் முகத்தை (தலைப்பக்கமாக) நோக்கி இருந்து குர்ஆன் ஓதுவது சுன்னத்தாகும்.

كذا في حاشية عبد الحميد على التحفة

மஸ்அலா : ஜியாரத்தின் போது ஓதவேண்டியவற்றை ஓதியபின் துஆ ஓதும்போது கிப்லாவை முன்னோக்கி நிற்பான். كذا في خزانة الفتاوى

ஷாஃபியீ மத்ஹபின் நூலான "முக்னீ مغني" யிலும் துஆ ஓதும்போது கிப்லாவை முன்னோக்கி நிற்பான் என்று கூறப்பட்டுள்ளது.

மஸ்அலா : முக்தாரான-தேர்ந்தெடுக்கப்பட்ட சொல்லின்படி கப்றருகில் ஓதுபவர்களை உட்கார வைப்பது 'மக்ரூஹ்' அல்ல.

كذا في الدار المختار

மக்களில் சிலர், "ஓதுபவர்கள் (ஓதிக் கொண்டிருக்கும் பொழுது) இருந்திடும் பொழுது முன்கர்-நகீர் போன்றோர் வரமாட்டார்கள்" என்று கூறுகின்றனர். அடக்கப்பட்டவுடன் குர்ஆன் கத்தம் செய்ய ஓதுவதற்கென்றே சிலரை ஏற்பாடு செய்கின்றனர். இவ்வாறு ஏற்பாடு செய்வது கிதாபுகளில் காணப்படவில்லை. கப்றில் ஜியாரத்துக்கு அல்லது குர்ஆன் ஓதுவதற்கு மக்கள் ஜும்ஆ மற்றும் இரவுகளில் கூடுவது 'மக்ரூஹ்' அல்லவென்று ஷாஃபிஈ மத்ஹபின் 'முக்னீ مغني' என்னும் கிதாபில் கூறப்பட்டுள்ளது. - ஃபல்யு ராஜிஊ

ஹனஃபீ மத்ஹபின் ஷைகு அபூபக்ரின் முஹம்மதுப்னுல் ஃபளூலு (ரஹ்) அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது : "கப்றில் இருந்து கொண்டு 'சிர்ராக' (மெல்ல) குர்ஆன் ஓதுவது குற்றமல்ல; 'ஜஹ்ராக' (உரக்க) ஓதுவது மக்ரூஹ் என்று கூறப்பட்டுள்ளது.

كذا في الذخيرة

மஸ்அலா : மய்யித்தைக் குளிப்பாட்டும் வரை மய்யித்திடம் அமர்ந்து குர்ஆன் ஓதுவது கூடாது.

كذا في الفتاوى زيلعي

போன்றவற்றில் 'மக்ரூஹ்' எனக் கூறப்பட்டுள்ளது.

இதன் விளக்கமாவது : மய்யித்து நஜீஸ் ஆகிவிட்டது என்பவர்கள் மக்ரூஹ் என்று கூறுகின்றனர். 'ஹதஸ்' (சிறுதொடக்கு) என்று கருத்துள்ளவர்கள் கூடும் என்று கூறுகின்றனர். எனவே மய்யித்தை விட்டும் தொலைவாக இருந்து ஓதுவது 'மக்ரூஹ்' அல்ல என்னும் சொல்லில் 'கிலாஃப்' முரண்பாடில்லை. ஓதினாலும் முரண் பாடில்லை. மக்ரூஹ் அல்ல.

كذا في امداد الفتاوى والشرنبلالى

ஷாஃபிஈ மத்ஹபின்படி மவ்த்தாகி குளிப்பாட்டி முடிக்கும் வரை குர்ஆன் ஓதுவது கூடாது. எனினும், இப்னு ருஃப்ஆ (ரஹ்) அவர்கள் ஜாயிஸ் (கூடும்) என்று கூறுகிறார்கள்.

மஸ்அலா : ஹிதாயா முதலிய நூற்களில் மனிதர்கள் தங்களுடைய தொழுகை, நோன்பு, சதகா முதலிய நற்செயல்களின் நன்மைகளை (ஸவாபை) மற்றவர்களுக்கு அளித்து விடுவது கூடும் என்று எழுதப்பட்டுள்ளது. நஃபிலான சதகா செய்பவன் முஃமினான ஆண் பெண்களை அனைவரையும் நிய்யத்துச் செய்து கொள்வது மிகச் சிறந்ததாகும். ஏனெனில், அதற்குரிய நன்மைகள் அனைவருக்கும் சேர்வதால் எவருக்கும் நன்மைகள் குறையமாட்டாது.

كذا في التتارخانية

மஸ்அலா : ஷாஃபியாக்களில் பின்னோர்களான சட்ட மேதைகளிடமும், ஹனஃபீயாக்களிலும் இறந்தவர்களுக்கு ஓதப்படுவதன் நன்மைகள் சேரும்.

மஃஅலா : சுன்னத் வல்ஜமாஅத்துடையவர்களின் கூற்றுப்படி, ஒருவன் தொழுகை, நோன்பு, சதகா போன்றவற்றின் நன்மைகளை இறந்துவிட்டவ ளுக்கும், உயிருடன் இருப்பவர்கஜ கும் சேர்த்து வைப்பதால் நன்மை சேரும்.

كذا في البحر الرائق عن الينابيع

குறிப்பிட்ட இபாதத்துகளைச் செய்யும் போதே மற்றவரை நிய்யத்துச் செய்து கொண்டாலும், அல்லது முதலில் தமக்குச் செய்து கொண்டு, பிறகு அதன் ஸவாபைச் சேர்த்தாலும் சரியே! அந்த இபாதத் ஃபர்ளாகவோ, நஃபிலாகவோ இருந்திடினும் சரியே!

كذا في الينابيع جامع الفتاوى

ஜாமிஉல் Fபதாவாவில் வருகிறது : ஃபர்ளான இபாதத் களில் ஜாயிஸ் அல்ல. உயிர் வாழ்பவனுக்கு ஸவாபை ஹத்யா செய்வதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும், ஒரு சொல்லின்படி ஸஹீஹ் ஆகும். அதாவது கூடும். (ஃபர்ளான அமலை உயிர் வாழ்பவனுக்கு ஹதியா செய்வது கூடும்).

كذا في كتاب الروح

ஒரு சொல்லின்படி, உயிர் வாழ்பவன் தனக்குத் தாமே (தனியே) செய்து கொள்ள சக்தி பெற்றவனாக இருப்பதால் அது கூடாது.

குர்ஆனை (வாங்கி) வக்ஃப் செய்வதும், பள்ளிவாசல் கட்டுவதும், கிணறு, குளம் முதலியவை வெட்டுவதும்,

தானம் செய்வதும், மத்ரஸா, கான்காஹ் திக்ரு மஜ்லிஸ்கள் ஏற்படுத்துவதும், தனது வாழ்நாளிலோ அல்லது இறந்த பின்னரோ மற்றவர்கள் செய்வதும் பயன் அளிக்கும் செயலாகும். كذا في كتب الشافعية

அடுத்து, மய்யித்துக்கு எந்த ஒரு நன்மையை எத்தி வைத்தாலும் சேராது என்பதாக, முஃதஸிலா என்னும் கூட்டத்தாரும், வஹ்ஹாபிகள் மற்றும் மத்ஹபைச் சேராதவர்கள் குர்ஆனுடைய சில வசனங்களையும், ஹதீஸ்களிலுள்ளவற்றில் அதன் கருத்தை விளங்காமல் கூறுகிறார்கள். அதைக் கேட்டு ஏமாற்றமடைந்து விடக் கூடாது. இமாம்கள், உலமாக்கள் இவற்றுக்குத் தெளிவான விளக்கங்கள் கொடுத்து மறுத்துள்ளார்கள்.

''தன்பீஹ்'' எச்சரிக்கை! இமாம் நவவீ (ரஹ்) அவர்களது முஸ்லிம் ஷரீஃபின் விரிவுரையிலும், இப்னு அப்துஸ்ஸலாம் அவர்கள் தங்கள் ஃபத்வாவிலும் மய்யித்துக்கு ஓதுவதுனுடைய ஸவாபு-நன்மைகள் சேராதென்று கூறப்பட்டுள்ளது. ளயீப்-பலவீனமான தாகும். நம்முடைய ஷாஃபிஈ மத்ஹபின் ஃபுக்ஹாக் களான சட்டமேதைகள் மற்றுமுள்ள மூன்று இமாம்களும் நன்மைகள் (மவ்த்தாவுக்குச்) சேரும் எனக் கூறி யுள்ளார்கள். பலரும் இதனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளனர்.

இமாம் ஸுப்கீ (ரஹ்) மற்றுமுள்ள இமாம்கள் இதை 'முஃதமத்' معتمد ஆக்கியுள்ளார்கள்.

இன்னும் சில சட்டமேதைகள், குர்ஆன் ஓதும் பொழுது, எந்த மய்யித்தை நிய்யத்து செய்வது கொண்டு ஓதப்படுமோ அதற்கே நன்மைகள் சேரும்; ஓதிய பின்னர் நிய்யத் செய்தாலும் நன்மைகள் சேரும். இமாம் நவவீ

(ரஹ்) நன்மை இறந்தவர்களுக்குச் சேராது என்று கூறியதெல்லாம், மய்யித்தின் அருகில் ஓதாமல் ஓதுபவர் அதன் நன்மைகளை அந்த மய்யித்திற்காக நிய்யத்துச் செய்யாதிருந்தாலும் அல்லது நிய்யத்துச் செய்திருந்தும் துஆ ஓதாதிருந்தால்தான் என்று கருத்து கூறியுள்ளார்கள்.

இமாம்நவவீ ஷரஹ் முஸ்லிமில் வேறு இடத்திலும் 'அஸ்கார்' என்னும் நூலிலும் மய்யித்திற்கு நன்மைகள் சேரும் என்பதாக மற்றுமுள்ள மூன்று இமாம்களைப் போன்று கருத்துக் கூறியுள்ளார்கள். இவ்வாறே மக்களின் செயல்களும் நிகழ்ந்து வருகின்றன. மக்கள் அழகானதாகக் கண்டுள்ள ஒரு செயலானது அல்லாஹ்விடத்திலும் அழகானதேயாகும். كذا في حاشية اعانة الطالبين

4. குர்ஆன் ஓத கூலி வாங்கலாமா?

மஸ்அலா : ஹனஃபீ மத்ஹபின் ரத்துல் முக்தாரில், "கூலி பேசி குர்ஆன் ஓதுவதும், கூலி கொடுப்பதும் கூடாது. (ஜாயிஸ் அல்ல.) கூலி வாங்கிக் கொண்டு குர்ஆன் ஓதுபவனுக்கு நன்மை கிடைக்காது. மய்யித்துக்கும் நன்மை சேராது. ஓதுபவர்களுக்குக் கூலி கொடுக்கு மாறு வஸிய்யத்துச் செய்வதும் கூடாது. இவை யாவும் தீய பித்அத்தாகும். கூலி வாங்குவதும் ஹராம் என்பதாக பல கிதாபுகளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

கூலி வாங்குவது ஹராம் என்பதில் "கிலாஃப்" மாற்றம் கிடையாது. 'ஜவ்ஹர்' என்னும் நூலில் 'கிலாஃப்' (முரண்பாடு) இருப்பதாக நகல்

செய்யப்பட்டிருப்பதை ரத்து (நீக்கப்பட்டுள்ளது) செய்யப்பட்டுள்ளது. இக்காலத்தில் சில லெப்பைகள் பன்னிரண்டு ரூபாய்களுக்குக் குறைவாகக் கூலி வாங்கக் கூடாது என்று கூறுவதையும் மறுக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் : ஜவாஹிருல் மஸாயில்

கேள்வி : கூலி கொடுத்து குர்ஆன் ஓத வைத்து அதனை இறந்து விட்டவர்களுக்குச் சேர்த்து வைப்பது அல்லது கூலி கொடுத்து திக்ரு செய்ய வைத்து அதன் பலனைச் சேர்த்து வைப்பது ஆகுமா? அதனால் இறந்தவர்கள் பயன் அடைவார்களா?

பதில் : கூலி கொடுத்து குர்ஆன், திக்ரு முதலியவைகளை ஓத வைத்தால் ஓத வைத்தவர்களுக்கும் அவர்கள் மூலம் இறந்து போனவர்களுக்கும் நன்மை கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. இவைகளை விட குர்ஆனை வாங்கி, ஓர் ஏழை மாணவன் அல்லது மாணவிக்கு அன்பளிப்பாக கொடுத்தால் அல்லது பள்ளிவாசல் மத்ரஸா போன்றவற்றுக்கு அன்பளிப்புச் செய்தால், பழுதடைந்து கிடக்கும் மார்க்க நிறுவனங்களைப் பழுது பார்த்தல் போன்ற காரியங்களைச் செய்து அதன் நன்மையை இறந்து விட்டவர்களுக்குச் சேர்த்து வைப்பது சிறந்த முறையாகும்.

நூல் : ஃபாத்திஹா கா ஸஹீஹ் தரீக்கா

5. சத்தமிட்டுக் குர்ஆன் ஓதலாமா?

ஹனஃபீ மத்ஹபின்படி கூட்டமாக அமர்ந்து 'ஜஹ்ராக' உரக்கக் குர்ஆன் ஓதுவதில் காது தாழ்த்திக் கேட்பது வாஜிபும், வாய் மூடி இருப்பதும் தவறி விடுவதால் (சத்தமிட்டுச் சபையில் குர்ஆன் ஓதுவது) மக்ரூஹ் ஆகும்.

كذا في القنية

''கஸானத்துர் ரிவாயா''த்தில் எழுதப்பட்டுள்ளது : மக்கள் (ஓர் இடத்தில்) கூட்டமாக அமர்ந்து குர்ஆனை கத்தம் செய்வது ''மக்ரூஹ்'' ஆகும். அதற்கு ஃபார்ஸீ மொழியில், **''ஸிஃபார்ரா குவாந்தன்''** என்று கூறப்படும். ''பினாயா'' என்னும் கிதாபில் ''மக்கள் கூடியிருந்து சத்தமிட்டு முப்பது ஜுஸ்வுகளையும் ஓதுவதன் மூலம் அதில் தவறுகள் ஏற்படுவதால் 'மக்ரூஹ்' ஆகும்.

மஸ்அலா : நம்முடைய நாட்டில் இறந்து போன மூன்றாம் நாள், ஏழாம் நாள், நாற்பதாம் நாள், முதல் ஆண்டு துவக்கம் (வருட ஃபாத்திஹா) இந்நாட்களில் மக்கள் அழைத்து, சீர்ணீ தயார் செய்து, அந்த மஜ்லிஸில் வைத்து குர்ஆன் ஓதுகிறார்கள்.

ஹனஃபீ மத்ஹபின் بزازية (Bபஸ்ஸாஸிய்யா) வில் கூறப்பட்டுள்ளது: முதல் நாள், இரண்டாம் நாள், நான்காம் நாள், ஏழாம் நாள் உணவு சமைப்பதும் அதை கப்றுகளுக்கு அதாவது கூட்டத்தில் கொண்டு செல்வதும், குர்ஆன் ஓதுவதற்காக 'தஃவத்' சோறு சமைப்பதும், ஆலிம்கள், சாலிஹீன்கள்

மற்றும் கத்தம் ஓத அல்லது யாசீன் ஃபாத்திஹா ஓதுவதற்காக கூட்டம் போடுவதும் 'மக்ரூஹ்' ஆகும்.

குர்ஆன் ஓதும் இடத்தில் உணவு (சோறு), ரொட்டி முதலியவற்றை வைப்பது (மக்ரூஹ்) ஆகும். ஏழைகளுக்கு உணவு சமைத்துக் கொடுப்பது சிறந்ததாகும்.

இன்த்தஹா பிஜியாததா

ஷாஃபியீ மத்ஹபின் 'ஃபதாவா குப்ரா'வில் இப்னு ஹஜரில் எழுதப்பட்டுள்ளது : இறந்துவிட்ட மூன்றாம் நாள், ஏழாம் நாள் உணவு சமைத்து ஏழைகளுக்கு கொடுப்பதும், அதை வழக்கமாக நடத்தி வருவதும், சதகா செய்வதும் இவை யாவும் பழிக்கத்தக்க பித்அத். ஹராமல்ல. ஆனால், அவனை மக்கள் இழிவாகப் பேசி, மானபங்கம் செய்வார்கள், புறம் பேசுவார்கள் என்பதைத் தவிர்ப்பதற்காக அவ்வாறு செய்தால் அவனுக்கு நன்மைகள் கிடைக்கும். மய்யித்தின் வாரிசுகளில் குழந்தைகள், பைத்தியக்காரர்கள் இருப்பார்களாயின் ஹராமாகும்.

சில கிதாபுகளில், ''நபி (ஸல்) அவர்களது மகனார் இப்ராஹீம் இறந்துவிட்ட மூன்றாம் நாள் அபூதர் (ரலி) அவர்கள் காய்ந்த பேரீச்சம்பழம், ஒட்டகத்தின் பால், கோதுமை ரொட்டி இவைகளைக் கொண்டு நபி (ஸல்) அவர்களுக்கு முன்னே வைத்தார்கள்''. நபி (ஸல்) அவர்கள் ''சூரத்துல் ஃபாத்திஹா' ஒரு முறை 'சூரத்துல் இக்லாஸ்' மூன்று முறை ஓதி ''அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அன்த்த லஹா அஹ்லுன் வஹுவ லஹா அஹ்லுன்'' என்று ஓதி தங்களது இரண்டு கைகளையும்

உயர்த்தி, தங்கள் முகத்தில் தடவிக் கொண்டு, அபூதர் (ரலி) அவர்களை நோக்கி அதைப் பங்கிடுமாறு கூறி, இவ்வுணவின் நன்மைகள் எனது மகன் இப்ராஹீமுக்குச் சேர்வதாக எனக் கூறியதாக எழுதப்பட்டுள்ளது. இக்கூற்றை அப்துல் ஹய்யில் லக்னவீ நவ்வரல்லாஹு மன்ஜஅஹு அவர்கள் தங்கள் ஃபதாவாவில் (மார்க்கத் தீர்ப்பில்) பொய் என்பதாகக் கூறியுள்ளார்கள். இவை யாவும் அக்காலத்தில் வாங்கித் தின்று கொண்டிருந்த மூடர்கள் இட்டுக் கட்டியதாகும். **கமா லாயெக் ஃபீ** அதை ஆதாரமாகக் கொள்ளக் கூடாது.

6. மய்யித்து வீட்டில் விருந்து

மஸ்அலா : மய்யித்து வீட்டார் விருந்து வைப்பது ஷாஃபிஈ மத்ஹபின் கிதாபுகளிலும், ஹனஃபீ மத்ஹபின் அதிகமான கிதாபுகளிலும் ஜாயிஸ் அல்ல; கூடாது என்று எழுதப்பட்டுள்ளது. அந்த விருந்தை ஏற்பது மக்ரூஹ் ஆகும்.

كذا في التحفة

மய்யித்து வீட்டாருக்கு அவரது உறவினர்கள் உணவு சமைத்து கொடுப்பது ''முஸ்தஹப்' ஆகும் என்று ஹனஃபீ, ஷாஃபிஈ மத்ஹப்களின் நூற்களில் எழுதப் பட்டுள்ளது.

மஸ்அலா : மூன்றாம் நாள், பத்தாம் நாள், நாற்பதாம் நாள் என்பதெல்லாம் நாமே ஏற்படுத்திக் கொண்ட பழக்க வழக்கங்களாகும்; ஜாயிஸ் அல்ல; கூடாது. ஃபதாவா தாருல் உலூம்

மஸ்அலா : மய்யித்திற்கு நன்மை சேர்த்து வைத்திட ஏழைகளுக்கு உணவு கொடுப்பதும், உண்ண

வைப்பதும் கூடும். எனினும் மய்யித்தின் சொத்திலிருந்து செய்வதாக இருந்தால் வாரிசுகள் அனைவரின் ஒப்புதல் அவசியமாகும். சிறுவர்கள் மற்றும் பைத்தியக்காரர்களின் சம்மதம் செல்லாது. - பஹ்ருர் ராயிக்

மய்யித்திற்கு நன்மை சேர்த்து வைப்பதற்காக ஏழைகளுக்கு உணவளிப்பது அல்லது கொடுப்பது என்பது ஒன்று; மற்றொன்று பழக்கவழக்க முறையில் விருந்து அளிப்பதற்கான ஏற்பாடு செய்வது. இதற்குப் பொதுமக்கள், ''விருந்து கொடுப்பது'' என்று சொல்கிறார்கள். இதில் சகோதரர்கள், உறவினர்கள், ஏழை, பணக்காரன் எல்லோருக்கும் அழைப்பு விடுக்கிறார்கள். இது கூடாது; கெட்ட பழக்கம். இந்த அழைப்பில் ஏழைகளும் கலந்து கொள்ளக் கூடாது.

- ஃபதாவா ரஷீதிய்யா, பஹ்ருர் ராயிக்

மஸ்அலா : மண்ணறைக்கு (கப்ருஸ்தானுக்கு)ச் சென்றால் நன்மையைச் சாட்டுவதற்குரிய இது சிறந்த முறையாகும். யாசீன் சூரா போன்றதை முடிந்த வரை ஓதவும். அல்ஹம்து சூரா ஓதிக் கொள்ளவும். சூரா பகராவில் அலிஃப் லாம் துவக்கத்திலிருந்து முஃப்லிஹூன் வரையும் பிறகு கடைசியில் ஆமனர் ரசூலு முதல் சூரா கடைசி வரையிலும் ஆயத்துல் குர்ஸீயும், வாய்ப்புக் கிடைத்தால் தபாரகல்லதீயும், அல்ஹாக்கு முத்தகாஸுரு சூராவும் ஓதிக் கொள்ளவும்.

குல்ஹுவல்லாஹு சூரா பன்னிரண்டு அல்லது பதினொன்று அல்லது ஏழு அல்லது மூன்று முறைகள் ஓதிக் கொள்ளவும். முன்னும் பின்னும் ஸலவாத்து ஓதிக்

கொண்டால் அவசியம் ஏற்றுக் கொள்ளப் படும் என்ற நம்பிக்கை உண்டு. பிறகு,

யா அல்லாஹ்! நாங்கள் ஓதியவற்றின் நன்மையை இன்னார்க்குச் சேர்ப்பித்து விடு என்று துஆ ஓதிக் கொள்ளவும். - ஷாமி

நன்மையைச் சாட்டுவதற்கு ஷரீஅத்தில் குறிப்பான, அவசியமான ஒரு முறை குறிப் பிடப்படவில்லை. அதன் முக்கிய விசயம் ஒரு நன்மையான காரியத்தை செய்து, ''யா அல்லாஹ்! இதன் நன்மையை இன்னார்க்குச் சேர்த்து விடு'' என்று மனதால் துஆச் செய்ய லாம்; நாவாலும் கூறினால் நல்லதே! - ஷாமி

மஸ்அலா : நன்மையைச் சாட்டுவது இரு வகைப்படும். ஒன்றாவது : ஒரு செயலை ஒருவன் தனக்காகச் செய்தான். பின்பு தனக்குக் கிடைக்கும் நன்மையைக் கொடுத்து விட நினைத்தான். இவ்வகையில் பின்னர் துஆச் செய்ய வேண்டியது அவசியம்.

இரண்டாவது : பிறருக்குக் கொடுப்பதற் காகவே செய்தான். அது அவர்களுக்குச் சேர்ந்துவிடும். பின்பு துஆச் செய்ய வேண்டியதில்லை. - ஷாமி

மஸ்அலா : பொருள் சம்பந்தப்பட்ட வணக்கமான ஏழைகளுக்குப் பணம் கொடுத்தல், உணவு கொடுத்தல் போன்றவற்றை ஏழைக்குக் கொடுத்த பின்னரே அதற்கான நன்மை கிடைக்கும். அதை கொடுப்பதற்கு முன்பே நன்மையை சாட்டுவது பொருத்தமானதல்ல. உடல் வணக்கமான தொழுகை, நோன்பு, கலிமா, சலவாத்து, குர்ஆன் ஓதுவது முதலிய

வற்றைப் போன்று அவைகளை முதலில் செய்ய வேண்டும். பின்பு நன்மையைச் சாட்டவேண்டும். - பிஹிஷ்தீஜேவர்

கேள்வி : ஒரு நற்செயலின் பயனை ஒரே தடவையில் பலருக்குச் சேர்த்து வைக்கலாமா? அவ்வாறாயின் அவர்கள் அனைவரும் அதன் நன்மை முழுக்க முழுக்கக் கிடைக்குமா?

பதில் : அந்த அமலின் நன்மையானது அவர்களுக் குரிய பங்கின்படி கிடைக்கும். அல்லாஹ் நாடினால் அவர்களில் ஒவ்வொருவருக்கும் அதன் முழு நன்மைகளையும் கொடுக்கலாம். அது அவனது விருப்பத்தைப் பொறுத்தது. அவனுடைய கருவூலத்தில் (கஜானாவில்) என்ன குறையிருக்கிறது!

கேள்வி : உணவு அல்லது தின்பண்டம் ஆகியவற்றை வழங்குவதற்கு முன்னால் ஃபாத்திஹா (துஆ) ஓதி, அதன் நன்மைகளை இறந்தவர் களுக்குச் சேர்த்து வைக்க முடியுமா?

பதில் : அது எப்படி? உணவையோ, தின்பண்டங் களையோ கொடுப்பதற்கு முன்னரே அவை களுக்குரிய நன்மை எப்படிக் கிடைக்கும். நன்மை கிடைத்த பின்னரல்லவா அதை ஒருவருக்குச் சேர்த்து வைக்க முடியும்! நன்மையைச் சேர்த்து வைப்பதற்குத்தானே ஃபாத்திஹா என்று கூறப்படுகிறது. இன்று மக்கள் நடைமுறையிலுள்ள ஃபாத்திஹா முறை தவறானது. முதலில் பண்டங்களை வழங்கி, நன்மையைப் பிறருக்குச் சேர்ப்பதே சரியான முறையாகும்.

ஆதாரம் : ஃபாத்திஹா கா ஸஹீஹ் தரீக்கா

நாம் நம்முடைய அனுபவத்தில் கண்டு வருகிறோம். அதாவது அல்லாஹ்வின் நல்லடியார்கள் பலர் ஆயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள நிலங்களையும், தோட்டங் களையும் அல்லாஹ்வின் பாதையில் கொடுக்கிறார்கள். ஆனால், இதற்காக எவரும் ஃபாத்திஹா ஓதுவதில்லை; எனினும் அவற்றுக்குரிய நன்மைகள் கிடைக்கவே செய்கின்றன. இந்நிலையில் உணவை ஏழைகளுக்கு வழங்கிடுவதற்காக தேக்ஸாவில் சமைத்திடும் பொழுது, அந்த தேக்ஸாவுக்கு முன்னால் ஃபாத்திஹா ஓதாவிட்டால் அதன் நன்மை கிடைக்காமல் போய்விடுமா? இவை யெல்லாம் அறிவீனர்களின் ஏற்பாடாகும். துஆ ஓதுவதின் நன்மை வேறு; உணவு போன்ற தானங்கள் வழங்குவதின் நன்மை வேறு.

நாம் இப்பொழுது ஓர் உதாரணத்தின் மூலம் உங்களுக்கு விளக்குகிறோம். நம்மிடம் பத்து ரூபாயோ, ஐம்பது ரூபாயோ இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவற்றுக்குரிய நன்மையை நபி அல்லது வலிய்யுல்லாஹ் அல்லது இறந்துவிட்ட முஸ்லிம்கள் எவர்களுக்காவது சேர்ப்பித்திட விரும்பினால் முதலில் அந்தப் பணத்தை அல்லாஹ்வின் பெயரால் சதகா செய்து விடவேண்டும்.

ஆனால், மக்களோ அப்பணத்தை தானம் செய்யவில்லை; மாறாக பணத்தைத் தங்களுக்கு முன்னே வைத்து அதன் மீது ஃபாத்திஹா ஓதிச் சேர்ப்பித்து விடுவார்களாயின் ஃபாத்திஹா (துஆ)வுக்குரிய நன்மை மட்டுமே இறந்தவருக்குச் சேரும். பணத்திற்குரிய நன்மைச் சேராது. காரணம் அப்பணம் இப்பொழுது முன்னாலேயே இருக்கிறது. கையை விட்டும் நீங்க வில்லை. அவ்வாறிருக்க பணத்திற்குரிய நன்மை எவ்வாறு சேரும்?

பணத்தை எவராவது ஏழைக்கோ, அல்லாஹ்வின் பாதையிலோ சதகா செய்துவிட்டால், இப்பொழுது அப்பணத்திற்குரிய நன்மை கிடைக்கும்.

இப்பொழுது அல்லாஹ்விடத்தில் ''யா அல்லாஹ்! உன் வழியில் செலவு செய்த பணத்தின் நன்மையையும், துஆவின் நன்மையையும் இன்னாருக்குச் சேர்த்து விடுவாயாக! என்று கூறினால் இரண்டினுடைய நன்மைகளும் குறிப்பிட்டவர்களுக்குப் போய்ச் சேரும்.

இதேபோன்று சமைக்கப்பட்ட உணவை முதலில் அல்லாஹ்வின் பெயரால் எவருக்கு உணவு பெறுவதற்குரிய தகுதியுள்ளதோ அவர்களுக்குக் கொடுத்து, உணவு வழங்கிய பிறகு துஆ ஓதி, அல்லாஹ்விடம் ''இவ்வுணவுக்குரிய நன்மையையும், துஆவினுடைய நன்மையையும் இன்னின்னாருக்குச் சேர்ப்பித்து வைக்கிறேன்'' என்று துஆக் கேட்க வேண்டும்.

''ஈஸால் ஸவாப்'' நன்மையைச் சேர்ப்பித்து வைப்பதற்காக சமைக்கப்பட்ட உணவை எவருக்கும் வழங்காமல், அதன் மீது ஆயிரம் முறை ஃபாத்திஹா ஓதினாலும் உணவுக்குரிய நன்மை இறந்தவருக்குச் சேராது. அது சிலரின் வயிற்றுக்கு மட்டுமே போய்ச் சேரும்.

உணவை வழங்குவதற்கு முன்னரே ஃபாத்திஹா ஓதிவிடுவதால், அந்தச் சோற்றுச் சட்டியிலுள்ள உணவின் நன்மை சென்றடைந்து விடுகிறது என்றால், உணவைச் சமைப்பதற்குத் தேவை என்ன உள்ளது.

கடைவீதியின் பக்கம் நடந்து சென்று கொண்டிருக்கும் போதே, ஏதாவது ஒரு மிட்டாய்க் கடைக்கு முன்னே நின்று ஃபாத்திஹா ஓதி அந்த மிட்டாய்க் கடையினுடைய முழு நன்மையையும் சேர்த்து விடுவோமா?

அவ்வாறு செய்தால் இறந்தவர்க்கு நன்மை கிடைத்து விடுமா? இவை யாவும் அறியா மக்களின் தவறான

எண்ணங்களாகும். வழிகாட்ட வேண்டியவர்களே வழி கேட்டிற்குத் துணை போகலாமா?

அடுத்து, நபி (ஸல்) அவர்கள் உணவுப் பொருள்கள், குடிக்கும் பானங்கள் மீது ஏதாவது ஓதியுள்ளார்கள். துஆச் செய்துள்ளார்கள் என்றால் அவற்றினுடைய பரக்கத்திற் காகச் செய்துள்ளார்கள்.

ஸஅலபா என்னும் தோழருக்கு ஓர் ஆட்டை வழங்கி, அதில் பெருக்கம் (பரக்கத்) ஏற்பட வேண்டுமென்று நபி (ஸல்) அவர்கள் துஆ இறைஞ்சினார்கள். அந்த துஆவின் பொருட்டால் அந்த ஆடு, ஆட்டு மந்தையாகப் பெருகலா யிற்று. அத்தோழரின் வறுமை நீங்கி அவர்களுக்கு வளவாழ்வு ஏற்பட்டது.

நாம் அவ்வாறு ஓதினால் அந்த ஆட்டில் பரக்கத் ஏற்படுமா? ஓதியே பல கடைகளை மூடியிருக்கிறோமே!

நபி (ஸல்) அவர்கள் துஆவின் சிறப்பைக் காண் போம்.

பத்துப் பேர்களுக்கு மட்டுமே போதுமான உணவு இருந்தது. அதை ஐநூறு பேர்கள் உண்டனர். அல்லது ஐம்பது பேர்களுக்கு மட்டுமே உரிய உணவு இருந்தது. அதனை ஆயிரம் பேர்கள் உண்டனர்; இது நபி (ஸல்) அவர்களின் ''முஃஜிஸா'' அற்புதங்களில் உள்ளதாகும். ஈஸால் ஸவாபிற்காக ஓதவில்லை.

அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள் : நபி (ஸல்) அவர்களின் திருமணம் ஜைனபு (ரலி) அவர்களுடன் நடைபெற்று முடிந்தது. என்னுடைய தாய் உம்மு சுலைம் (ரலி) அவர்கள் பேரீத்தம்பழம், நெய், பன்னீர் கலந்து மாவினால் தயார் செய்து பாத்திரங்களில் நிரப்பி என்னிடம் கொடுத்து, ''அனஸே! இதை நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு சென்று ''என்னுடைய தாய் இந்த அற்பப் பொருளை அன்பளிப்பாகத் தங்கள் சமூகத்திற்கு

அனுப்பியுள்ளார்; தங்களுக்கு ஸலாமும் கூறியுள்ளார்; மேலும் நபி அவர்களே! இச்சிறியதொரு அன்பளிப்பை நமது சார்பாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள் என்று கூறுக! என்பதாகச் சொல்லியனுப்பினார்கள்.

எனவே, நான் (நபி-(ஸல்) அவர்களிடம்) சென்று எனது தாய் எதைக் கூறினார்களோ அதை எடுத்துரைத்தேன். நபி (ஸல்) அவர்கள்,

''அதைக் கீழே வைத்து விடுங்கள்'' இன்னின்ன பெயர் கொண்டவர்களை அழைத்து வாருங்கள்; மேலும் வழியில் எவர் தென்படுகிறாரோ அவரையும் அழைத்து வாருங்கள்'' என்று கூறினார்கள்.

எனவே, நான் எவரின் பெயர்களை நபி (ஸல்) அவர்கள் சொல்லியனுப்பினார்களோ அவர்களையும், வழியில் சந்தித்தவர்களையும் அழைத்து வந்தேன். அதன் காரணகமாக வீடு முழுவதும் நிரம்பி விட்டனர்.

அனஸ் (ரலி) அவர்களிடம், ''நீங்கள் எல்லோரும் எத்தனைப் பேர்கள் இருப்பீர்கள்?'' என்று கேட்கப்பட்டது. அதற்கு அனஸ் (ரலி) அவர்கள் ''முன்னூறு (பேர்களுக்கு) நெருக்கமாக (இருப்போம்) இருக்கும்'' என்றார்கள்.

பிறகு நான் நபி (ஸல்) அவர்களை நோக்கினேன். அவர்கள் அந்த மாவு அல்லது இனிப்புப் பண்டத்தின் மீது கை வைத்து அல்லாஹ் நாடிய துஆக்கள் செய்தனர். பின்னர் பத்துப் பத்து மனிதர்களாக உண்ணத் துவங்கினர்; உண்பவர்களிடம்,

''அல்லாஹ்வின் பெயரைக் கூறி உண்ணுங்கள். அதுவும் என் முன்னிலையிலேயே உண்ணுங்கள்'' என்று கூறினார்கள்.

எப்பொழுது இந்த மனிதர்கள் வயிறு நிரமப உண்டு முடித்து அகன்ற பின், மற்றொரு குழு வந்தது; இதே போன்று அனைத்து மக்களும் உண்டார்கள்.

இதன் பின்னர் நபி (ஸல்) அவர்கள் என்னிடம், ''பாத்திரத்தை எடுத்துச் செல்லுங்கள்'' என்று கூறினார்கள்.

நான் பாத்திரத்தை எடுத்துக் கொண்டேன். நான் எந்த பாத்திரத்தை வைத்தேனோ அந்நேரத்தில் அதில் மாவு அதிகமாக இருந்ததா? அல்லது அதை எடுத்த நேரத்தில் அதிகமாக இருந்ததா? என்று என்னால் சொல்ல இயலவில்லை. மிஷ்காத் ஷரீஃப் பாகம் 2, பக்கம் 876

மளாஹிர் ஹக் பாகம் 4, பக்கம் 30

இப்பொழுது புரிகிறதா பரக்கத் என்பதன் பொருள். எடுத்தாலும் குறையக் கூடாது. இஃது அண்ணல் நபி (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட முஃஜிஸாவாகும்.

மேலும், ஈஸால் ஸவாபிற்காக சமைக்கப்பட்ட உணவு ஏழை எளியவர்கள், வறியவர்கள், அநாதைகள் இவர்களுக்குரிய ஹக்காக-உரிமையாக இருக்கிறது. அது பணக்காரர்களுக்குரிய ஹக்கு அல்ல; உரிமையல்ல.

ஆனால், இன்றைக்கு நடைமுறையில் மிகுதியாக நம் பார்வைக்குத் தெரியவருவது யாதென்றால், வசதி படைத்தவர்களே அதிகமாக உண்ண வருகின்றனர். எவர்கள் அந்த உணவை உண்பதற்கு உரிமை கொண்டவர்களோ அவர்களை வெளியே நிறுத்தி விடுகின்றனர்.

பெரும் வசதி படைத்தவர்கள் ஏழைகளுக்குரிய உணவை உண்டபின், ஏதும் மிஞ்சுமாயின், அப்பாவிகளான அந்த ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான் :

إِنَّمَا الصَّدَقٰتُ لِلْفُقَرَآءِ وَالْمَسٰكِيْنِ

சதகா என்னும் தானங்களெல்லாம் உண்மையில் ஏழைகளுக்கும், வறியவர்களுக்குமே உரித்தானவை யாகும். அத் : 9, வசனம் : 60

ஏழை, வறியோர் என்பவர்கள் எவர்கள் என்பதை ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குவோம். நாம் ஐம்பது நூறு பேர்களின் உணவை ''ஈஸால் சவாபின்'' நிய்யத்தில் சமைத்தோம் என்று வைத்துக் கொள்வோம். அதை உண்பதற்கு மக்களும் வந்துவிட்டனர். இவர்கள் உண்டு முடித்த பின்னர் ஒவ்வொருவரின் கைகளிலும் ஒவ்வொரு ரூபாயைக் கொடுங்கள்; இவர்கள் அந்த ஒரு ரூபாயை வாங்கிக் கொள்வார்களாயின் அவர்கள் அனைவரும் அவ்வுணவை உண்பதற்கு உரிமையுள்ளவர்கள்தாம். அவர்கள் வாங்க மறுத்தால் அவர்கள் உண்பதற்குத் தகுதியற்றவர்கள் ஆவர். ஏனெனில், அந்த உணவு ஏழைகளுக்காக வேண்டியே சமைக்கப்பட்டுள்ளது. தலைவர்களுக்காகவும், வசதி படைத்தவர்களுக்காகவும் அல்ல. ஆகவே, ''ஈஸாலெ ஸவாப்''பிற்காக ஏழைகள் உண்பதற்குச் சமைக்கப்பட்ட உணவை, வசதிபடைத்தோர் உண்பது, ஏழைகளின் ஹக்கை-உரிமையை எடுத்துக் கொண்ட குற்றம் ஏற்பட்டுவிடும் என்பதை உணர்வோமாக! -ஷரீஅத் யா ஜஹாலத்

அன்பர்களே! மறுமையில் பயனளித்திடும் நன்மைகள் இரு வகைப்படும். ஒன்று : இதில் மய்யித்தின் நாட்டத்திற்கும் முயற்சிக்கும் தொடர்பு இருக்கும். உதாரணமாக, அவன் ஈமான் கொள்ளுதல், நற்செயல்கள் செய்தல்.

மனிதனின் நற்செயல்கள் இருவகைப்படும். ஒன்று : அந்த நன்மைகள் வளர்ந்து கொண்டேயிருக்கும். இறப்பு

ஏற்பட்டதும் நின்றுவிடும். உதாரணமாக, தொழுகை, நோன்பு போன்றவை.

இரண்டாவது : இவ்வகை நற்செயல்களின் நன்மைகள் இறந்த பின்னரும் பெருகிக் கொண்டிருக்கும்.

-தஸ்ஹீலெ ஷவ்க்க வதன்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : முஃமின்கள் இறந்த பின்னரும் அவர்களுக்கு நன்மை கிடைக்கின்ற நற்செயல்கள் இவைகளாகும்.

(1) மார்க்க அறிவை (இல்மை)ப் பரவச் செய்தல். (2) இவர்கள் விட்டுச் செல்லும் நல்லொழுக்கமுள்ள பிள்ளைகள். (3) இவர் குர்ஆனை விட்டுச் சென்றார்; மற்றவர்கள் அதை எடுத்து ஓதுகிறார்கள். (4) பள்ளிவாசல் கட்டுதல். (5) மக்கள் பயனடையும் முறையில் வாய்க்கால் அல்லது ஆறு தோண்டி வைத்தல். -இப்னு மாஜா

ஒருவர் மரம் நட்டுவித்தார். (மனிதர்கள் அதன் பழம், நிழல் முதலியவற்றை அதன் மூலம் அடைகிறார்கள்.

-ஷரஹுஸ்ஸுதூர்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "எந்த மனிதன் ஒரு நற்செயலின் வழியைத் தோற்றுவிக்கின்றானோ அதனுடைய நன்மையும், எவரொருவர் இவ்வழியில் நடப்பார்களோ அந்த எல்லோருடைய நன்மைகளும் இவனுக்குக் கிடைக்கும். இதன் காரணமாக, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகள் குறைவு செய்யப்படமாட்டாது". - முஸ்லிம்

இரண்டாவது வகை : இது மய்யித்திற்கோ அல்லது வேறு மனிதனுடைய நாட்டம் மற்றும் முயற்சிக்கோ தொடர்பில்லை. (இது முழுவதுமே அல்லாஹ்வின் அருளாகும்.) உதாரணமாக, பயணத்தில் இறந்து விடுதல் அல்லது வெள்ளி இரவு அல்லது வெள்ளிக்கிழமை பகலில்

அல்லது வயிற்று வலியால் இறந்து போகுதல் மற்றும் இவை போன்றவை. அல்லது நல்லடியார்கள் பக்கத்தில் அடங்கும் பேறு (பாக்கியத்தை) அடைவது. அல்லது அல்லாஹ்வின் அருட்கொடை மட்டுமே ஏற்படல்.

ஹலரத் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்: ''மறுமையில் (அதாவது, இறந்தபின்) நல்லடியார்களின் பக்கத்தில் அடக்கம் செய்யப்படுவதால் பயன் கிடைக்குமா?'' என்று கேட்கப்பட்டது.

''உலகில் நல்லோர்களின் பக்கத்தில் இருப்பதால் பயன் கிடைக்குமா?'' என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு ''ஆம்'' கிடைக்கும் என பதிலளித்தார்கள்.

''அவ்வாறாயின், மறுமையில் (பயன் கிடைக்கும்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அப்துல்லாஹ் பின் நாஃபிஉ முஜ்னீ கூறுகிறார்கள் : ''ஒரு மனிதர் மதீனாவில் இறந்தார்; மதீனாவிலேயே அடக்கம் செய்யப்பட்டார். ஒரு மனிதரின் கனவில் அல்லது ''கஷ்ஃபின்'' மூலம் அவர் நரகவாதி என்று தெரிய வந்தது. இதை அறிந்த இவருக்கு மனம் வருந்தியது. பின்பு ஏழு, எட்டு நாட்களுக்குப் பின் மீண்டும் அதே மய்யித்தை இந்த மனிதருக்குக் காட்டப்பட்டது. இப்பொழுது அவர் சுவனவாசியாகத் தெரிந்தார். இதற்குரிய காரணத்தை அந்த மய்யித்திடமே கேட்டார். அதற்கவர்,

''எனக்குப் பக்கத்தில் ஒரு நல்ல மனிதர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பரிந்துரைச் செய்தார். அவரது பரிந்துரையால் அவரது பக்கத்திலுள்ள நாற்பது பேர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவர்களில் நானும் ஒருவன்'' என்று கூறினார்.

- ஷரஹுஸ் ஸுதூர்

7. கப்ராளிகளுக்கு ஸலாம் கூறும் முறை

عَنْ بُرَيْدَةَ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ

وَسَلَّمَ : كُنْتُ نَهَيْتُكُمْ عَنْ زِيَارَةِ الْقُبُوْرِ فَزُوْهَا

''நான் உங்களை மண்ணறைகளை சந்திக்கச் செல்வதிலிருந்து தடுத்து வந்தேன். இனி நீங்கள் (மண்ணறைகளை) ஜியாரத் செய்யுங்கள்''.

அறிவிப்பவர் : புரைதா (ரலி), முஸ்லிம்

முஸ்லிமின் இன்னொரு அறிவிப்பில், ''இனி நீங்கள் விரும்பினால் (கப்றுகளை ஜியாரத்) செய்யச் செல்லுங்கள். ஏனெனில், மண்ணறைகள் மறுமையை நினைவூட்டுவதாகும்'' என்று வந்துள்ளது.

கப்றுகளை ஜியாரத்துச் செய்யச் செல்பவர்களில் எத்தனைப் பேர்களுக்கு மறுமையைப் பற்றிய சிந்தனைகள் ஏற்படுகின்றன? மறுமையையும், மாமன்னனான அல்லாஹ்வையும் மறந்தவர்கள் தானே அங்கு செல்பவர்களில் பலர் இருக்கின்றனர்.

நபி (ஸல்) அவர்கள் மண்ணறைகளைச் சந்தித்தால் என்ன கூறவேண்டுமென்பதை நமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். உண்மை முஸ்லிம் அவர்களது வழிகாட்டுதலைப் பின்பற்றி, சுன்னத்தான முறையில் கப்றுகளை ஜியாரத் செய்வோமாக!

عَنْ بُرَيْدَةَ قَالَ : كَانَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ

يُعَلِّمُهُمْ اِذَا خَرَجُوْا اِلَى الْمَقَابِرِ اَنْ يَقُوْلَ قَائِلُهُمْ :

اَلسَّلَامُ عَلَيْكُمْ اَهْلَ الدِّيَارِ مِنَ الْمُؤْمِنِيْنَ وَالْمُسْلِمِيْنَ وَاِنَّا اِنْ شَاءَ اللّٰهُ بِكُمْ لَاحِقُوْنَ اَسْأَلُ اللّٰهَ لَنَا وَلَكُمُ الْعَافِيَةَ

கப்றுகளை ஜியாரத்துச் செய்யச் செல்பவர்களுக்கு நபி (ஸல்) அங்கு சென்று பின்வருமாறு கூறவேண்டு மென்று அறிவுறுத்தி வந்தார்கள்.

“ஈமான் கொண்டு, கீழ்ப்படிந்து வாழ்ந்து சென்ற ஊர் வாசிகளே! (கப்ராளிகளே!) உங்கள் மீது சாந்தி உண்டா கட்டும்! நாங்களும் இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடி னால்) விரைவில் உங்களை வந்து சந்திக்கயிருக்கின் றோம். அல்லாஹ்வின் தண்டனையிலிருந்தும், கோபத்தி லிருந்தும் தப்பித்திட நாங்கள் எங்களுக்காகவும், உங்களுக்காகவும் துஆச் செய்கின்றோம்.

அறிவிப்பவர் : புரைதா (ரலி), முஸ்லிம்

8. மய்யித்து வீட்டாருக்கு ஆறுதல் கூறுதல்

اَعْظَمَ اللّٰهُ اَجْرَكَ وَاَحْسَنَ عَزَائَكَ وَغَفَرَ لِمَيِّتِكَ

அஃளமல்லாஹு அஜ்ரக வஅஹ்ஸன அஜாஅக வகஃபர லிமய்யித்திக

அல்லாஹ் உங்களது கூலியைப் பெரிதாக்கி வைத்து, உங்களது கவலை வினவுதலை அழகாக்கி வைத்து, உங்களது மய்யித்தின் பிழைகளையும் பொறுத்தருள் வானாக!

முதற் பதிப்பு : ஹிஜ்ரி 1427 ஜமாதுல் அவ்வல் ஜூன் 2006
உரிமை : ஆசிரியருக்கே

காணிக்கை

இந்நூலின் நன்மைகள் அனைத்தையும் மர்ஹூமா, பத்ருன்னிஸா அவர்களுக்குக் காணிக்கை!

அல்லாஹ் அவர்களின் பிழைகளை மன்னித்து, அவர்களின் மண்ணறையை வெளிச்சமாக்கி வைப்பானாக!

முஸ்லிம் சகோதர சகோதரிகள் இறந்து விட்ட 'மர்ஹூமா'வுக்குப் பாவமன்னிப்பிற்காக துஆச் செய்ய வேண்டுகிறோம்.

ஒளி வடிவமைப்பு :
குளோபல் கிராபிக்ஸ்
2, போஸ்ட் ஆபிஸ் தெரு,
சென்னை—600 001.
Phone : 4216 1189